வாராந்திர நடப்பு நிகழ்வுகள் – முக்கிய 20 (நவ. 9 – 15, 2026)

https://www.shanmugamiasacademy.in/weekly-current-affairs/2026-11-09-to-2026-11-15

TNPSC, UPSC தேர்வுகளுக்கு இந்த வாரத்தின் மிக முக்கியமான 20 நடப்பு நிகழ்வுகள் – நம் தினசரி நடப்பு நிகழ்வுகளிலிருந்து தேர்ந்தெடுத்தவை; ஒவ்வொன்றும் சுருக்கக் குறிப்புடன், அந்நாளின் முழு விளக்கத்துக்கான இணைப்புடன்; இறுதியில் 10 வினாக்கள் கொண்ட சுயதேர்வு.

#	செய்தி	நாள்
1	தமிழ்நாடு · திட்டங்கள் 'வெற்றி மடிக்கணினித் திட்டம்' – நவ. 7, 2026 அரசு உத்தரவு; 2026–27-க்கு ₹2,000 கோடி; அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகளின் முதல், இரண்டாம் ஆண்டு இளநிலை, பட்டயப் படிப்பு மாணவர்களுக்கு; கொள்முதல் – ELCOT. தமிழ்நாட்டின் இலவச மடிக்கணினித் திட்டம் முதலில் 15-09-2011 அன்று தொடங்கியது.	09-11-2026
2	தமிழ்நாடு · வீட்டுவசதி 'வெற்றி வீடு திட்டம்' (தமிழ்நாடு பட்ஜெட் 2026–27 அறிவிப்பு): முதற்கட்டமாக (2026–27) 70,000 கிராமப்புற வீடுகளுக்கு ₹3,500 கோடி – வீட்டுக்கு ₹5 லட்சம் (4 தவணைகள்), 360–500 சதுர அடி, RCC கூரை; SC/ST-க்கு 40%, மாற்றுத்திறனாளிகளுக்கு 5%.	09-11-2026
3	தமிழ்நாடு · தொழில் தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்பு ஆணையம் – தமிழ்நாடு வணிக எளிதாக்கல் சட்டம் 2018 (2026 திருத்தம்) பிரிவு 16-A-ன் கீழ் நவ. 3, 2026 அன்று அறிவிக்கை; தலைவர் – தலைமைச் செயலர்; உறுப்பினர்-ஒருங்கிணைப்பாளர் – தொழில் துறைச் செயலர்.	09-11-2026
4	தமிழ்நாடு · உள்கட்டமைப்பு ₹200 கோடிக்கு மேலான மாநில அரசுக் கட்டுமான / உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தவும், வணிகத் திட்ட மேலாண்மை ஆலோசகராகச் செயல்படவும், பொதுப்பணித் துறை ஆணைப்படி, முழுவதும் அரசுக்குச் சொந்தமான 'தமிழ்நாடு உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானக் கழகம்' (TNICC) உருவாக்கப்பட்டது.	09-11-2026
5	அறிவியல் · விண்வெளி குலசேகரப்பட்டினம் ஏவுதளம் (தூத்துக்குடி மாவட்டம்): இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் – முதல்வர் சி. ஜோசப் விஜய் சந்திப்பு (நவ. 6, 2026); முதல் ஏவுதல் 2027-ல் இலக்கு. அடிக்கல் – 28-02-2024; SSLV ஏவுகலம் (குறைந்த புவி வட்டப்பாதைக்கு 500 கிலோ வரை).	09-11-2026
6	பண்பாடு · மரபு மகாபாரதம் (BORI, புனே), கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் (கிரந்த ஓலைச்சுவடி, மைசூரு ORI), கல்ஹணரின் ராஜதரங்கிணி கையெழுத்துப் படிகள் யுனெஸ்கோ 'உலக நினைவகம்' ஆசிய–பசிபிக் பிராந்தியப் பதிவேட்டில் சேர்ப்பு (நவ. 5, 2026 அறிவிப்பு) – இப்பதிவேட்டில் இந்தியாவுக்கு மொத்தம் 6.	09-11-2026
7	விளையாட்டு · சதுரங்கம் மத்தியப் பிரதேசத்தின் அனுஜ் ஸ்ரீவாத்ரி (22) இந்தியாவின் 100-வது சதுரங்க கிராண்ட்மாஸ்டர் (நவ. 8, 2026 செய்தி; பிலிப்பைன்ஸ் 7-வது ASEAN+ தனிநபர் ஓபன்). 99-வது – கோவையின் வி.எஸ். ரத்னவேல்; இந்தியாவின் முதல் GM – விஸ்வநாதன் ஆனந்த் (1988).	09-11-2026
8	விருதுகள் · இலக்கியம் புக்கர் பரிசு 2026 – எம். ஜான் ஹாரிசன் (81, பிரிட்டன்), நாவல் 'The End of Everything' (நவ. 9, 2026 அறிவிப்பு); மிக வயதான வெற்றியாளர் (முந்தைய சாதனை – மார்கரெட் அட்வுட், 79, 2019 கூட்டு வெற்றியாளர்). பரிசுத் தொகை £50,000.	10-11-2026

9	சுற்றுச்சூழல் · சர்வதேசம் ஐ.நா. காலநிலை மாநாடு COP31 – துருக்கியின் அன்டால்யா, நவ. 9–20, 2026; முதல் முறையாகப் பகிரப்பட்ட தலைமை: மாநாட்டுத் தலைவர் – துருக்கியின் முராத் குரும்; பேச்சுவார்த்தைத் தலைவர் – ஆஸ்திரேலியாவின் கிறிஸ் போவன். COP30 – பெலெம், பிரேசில் (2025).	10-11-2026
10	ஆட்சி · நகர்ப்புறம் தூய்மை ஆய்வு (Swachh Survekshan) 2025–26 (10-வது பதிப்பு) விருதுகள் – குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, நவ. 11, 2026; தமிழகத்தின் தூய்மையான நகரம் – தேனி–அல்லிநகரம் நகராட்சி. 4,751-க்கும் மேற்பட்ட நகரங்கள், 43 குறியீடுகள்.	11-11-2026
11	தமிழ்நாடு · சமூக நீதி தமிழ்நாடு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாநில ஆணையத் தலைவராக சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி எம்.வி. முரளிதரன் நியமனம் (நவ. 10, 2026 ஆணை) – பதவிக்காலம் 3 ஆண்டு அல்லது 75 வயது வரை (எது முந்துகிறதோ); சட்டம் – 2021 மாநில ஆணையச் சட்டம்.	11-11-2026
12	ஆட்சியியல் · நீதித்துறை தேசிய புத்தக அறக்கட்டளை (NBT) அரசியலமைப்பு உறுப்பு 12-ன் கீழ் 'பிற அதிகார அமைப்பு' – எனவே 'அரசு' என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு (நவ. 6, 2026); பகுதி III (அடிப்படை உரிமைகள்) நோக்கில் மட்டுமே; ஊழியர்கள் அரசுப் பணியாளர்கள் ஆகிவிடமாட்டார்கள். NBT – 1957, கல்வி அமைச்சகம்.	11-11-2026
13	பொருளாதாரம் · திட்டங்கள் ஸ்டாண்ட்-அப் இந்தியா திட்டம் 31-03-2031 வரை நீட்டிப்பு (மத்திய அமைச்சரவை, நவ. 11, 2026) – ₹4,111 கோடி உத்தரவாத நிதி; பெண்கள், SC, ST தொழில்முனைவோரின் புதிய தொழில்களுக்கு ₹10 லட்சத்துக்கு மேல் ₹1 கோடி வரை கடன். தொடக்கம் – 05-04-2016.	11-11-2026
14	தமிழ்நாடு · சுற்றுச்சூழல் தமிழகத்தின் மேலும் மூன்று கடற்கரைகளுக்கு நீலக்கொடிச் சான்று; கோவளத்துக்கு 6-வது முறை. வழங்குவது – சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை (FEE), கோபன்ஹேகன்; 33 அளவுகோல்கள். தமிழகத்தின் முதல் நீலக்கொடிக் கடற்கரை – கோவளம் (2021).	12-11-2026
15	சுற்றுச்சூழல் · அறிக்கைகள் பருவநிலை மாற்றச் செயல்திறன் குறியீடு (CCPI) 2027-ல் இந்தியா 28-வது இடத்துக்குச் சரிவு; வெளியீடு – ஜெர்மன்வாட்ச், நியூகிளைமேட் நிறுவனம், CAN (64 நாடுகள் + ஐரோப்பிய ஒன்றியம்); புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் 'குறைவு' மதிப்பீடு. எடை: பசுமை இல்ல வாயு 40%, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஆற்றல் பயன்பாடு, காலநிலைக் கொள்கை தலா 20%.	12-11-2026
16	பொருளாதாரம் · பணவீக்கம் அக்டோபர் 2026 அகில இந்திய நுகர்வோர் விலைப் பணவீக்கம் 6.09% (செப். 5.54%; உணவு 8.94%) – NSO, நவ. 12, 2026; பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு 7.29%-உடன் முதலிடம். ஜனவரி 2026 தரவு முதல் அடிப்படை ஆண்டு 2024; RBI இலக்கு 4% ±2%.	13-11-2026
17	தமிழ்நாடு · தொல்லியல் npj Heritage Science இதழ் ஆய்வு (அக். 29, 2026): கீழடி (சிவகங்கை), கொட்டிப்ரோலு (ஆந்திரப் பிரதேசம்) பானைகளில் (கி.மு. 600–100) பசுவின் பாலுடன் ஒத்துப்போகும் 6 கொழுப்பு உயிர்க்குறியீடுகள் – பண்டைய பால் பயன்பாட்டுச் சான்று; நிலக்கடலை போன்ற தாவர உணவுத் தடயம் உறுதியானதல்ல.	13-11-2026
18	தமிழ்நாடு · தொல்லியல் விழுப்புரம் மாவட்டம் எஸ். மேட்டுப்பாளையத்தில் தென்பெண்ணை ஆற்றுப் படுகையில் எலும்புகளுடன் கூடிய முதுமக்கள் தாழிகள், கருப்பு–சிவப்பு மட்பாண்டங்கள் கண்டெடுப்பு – சுமார் 2,300 ஆண்டு பழமை (ஆய்வாளர் மதிப்பீடு); அகழாய்வு, பாதுகாக்கப்பட்ட இட அறிவிப்பு கோரிக்கை.	15-11-2026
19	சுகாதாரம் · அறிக்கைகள் தேசிய சுகாதாரக் கணக்குகள் 2023–24 (11-வது சுற்று, NHSRC): மொத்தச் சுகாதாரச் செலவில் மக்களின் சொந்தச் செலவுப் பங்கு 42.7% (2013–14-ல் 64.2%); அரசுச் சுகாதாரச் செலவு ₹4,14,196 கோடி; தனிநபர் அரசுச் செலவு ₹2,959.	15-11-2026

20 **ஆட்சியியல் · தொழில்நுட்பம்** 15-11-2026

டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம் 2023-**ன் கீழ்** '**ஒப்புதல் மேலாளர்**' (Consent Manager) **பதிவு முறை நவ.** 13, 2026 **முதல் அமல்** (dpbi.gov.in); **இந்திய நிறுவனம், குறைந்தது** ₹2 **கோடி நிகர மதிப்பு; பதிவு – இந்தியத் தரவுப் பாதுகாப்பு வாரியம்.**

SHANMUGAM IAS AC

சுயதேர்வு – 10 வினாக்கள்

1. தமிழ்நாட்டின் 'வெற்றி மடிக்கணினித் திட்டத்தில்' (2026) மடிக்கணினிகளைக் கொள்முதல் செய்யும் நிறுவனம் எது?

அ) டிட்கோ
இ) சிப்காட்
ஆ) எல்காட் (ELCOT)
ஈ) மின்வாரியம்

2. 'வெற்றி வீடு திட்டத்தில்' ஒரு வீட்டுக்கு வழங்கப்படும் உதவித் தொகை எவ்வளவு?

அ) ₹2.5 லட்சம்
இ) ₹5 லட்சம்
ஆ) ₹3.5 லட்சம்
ஈ) ₹7 லட்சம்

3. நவம்பர் 2026-ல் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்பு ஆணையத்தின் தலைவர் யார்?

அ) முதலமைச்சர்
இ) தலைமைச் செயலர்
ஆ) தொழில் துறை அமைச்சர்
ஈ) நிதித் துறைச் செயலர்

4. குலசேகரப்பட்டினம் ஏவுதளம் எந்த மாவட்டத்தில் உள்ளது?

அ) திருநெல்வேலி
இ) தூத்துக்குடி
ஆ) கன்னியாகுமரி
ஈ) இராமநாதபுரம்

5. 2026-ல் யுனெஸ்கோ 'உலக நினைவகம்' ஆசிய–பசிபிக் பதிவேட்டில் சேர்க்கப்படாதது எது?

அ) மகாபாரதம்
இ) ராஜதரங்கிணி
ஆ) அர்த்தசாஸ்திரம்
ஈ) நாட்டிய சாஸ்திரம்

6. நவம்பர் 2026-ல் இந்தியாவின் 100-வது சதுரங்க கிராண்ட்மாஸ்டர் ஆனவர் யார்?

அ) வி.எஸ். ரத்னவேல்
இ) பிரணேஷ் எம்.
ஆ) அனுஜ் ஸ்ரீவாத்ரி
ஈ) ஆதித்யா மித்தல்

7. COP31 (நவ. 9–20, 2026) மாநாடு எங்கு நடைபெறுகிறது?

அ) பெலெம்
இ) அன்டால்யா
ஆ) பாகு
ஈ) அடிலெய்டு

8. தூய்மை ஆய்வு 2025–26-ல் தமிழகத்தின் தூய்மையான நகரமாகத் தேர்வானது எது?

அ) தேனி–அல்லிநகரம்
இ) ஓசூர்
ஆ) கரூர்
ஈ) கும்பகோணம்

9. 2026-ல் தேசிய புத்தக அறக்கட்டளையை எந்த உறுப்பின் கீழ் 'அரசு' என்று உச்ச நீதிமன்றம் கூறியது?

அ) உறுப்பு 12
இ) உறுப்பு 32
ஆ) உறுப்பு 14
ஈ) உறுப்பு 226

10. ஸ்டாண்ட்-அப் இந்தியா திட்டம் எதுவரை நீட்டிக்கப்பட்டுள்ளது?

அ) 31-03-2028
இ) 31-03-2031
ஆ) 31-03-2030
ஈ) 31-03-2035

விடைகள் · விளக்கம்

1. ஆ) கொள்முதல் – ELCOT; 2026–27-க்கு ₹2,000 கோடி ஒதுக்கீடு.
2. இ) வீட்டுக்கு ₹5 லட்சம், 4 தவணைகளில்; முதற்கட்டம் 70,000 வீடுகள்.
3. இ) தலைவர் – தலைமைச் செயலர்; உறுப்பினர்-ஒருங்கிணைப்பாளர் – தொழில் துறைச் செயலர்.
4. இ) குலசேகரப்பட்டினம் – தூத்துக்குடி மாவட்டம்; முதல் ஏவுதல் 2027-ல் இலக்கு (SSLV).
5. ஈ) 2026 பிராந்தியச் சேர்க்கை – மகாபாரதம், அர்த்தசாஸ்திரம், ராஜதரங்கிணி; நாட்டிய சாஸ்திரம் சர்வதேசப் பதிவேட்டில் (2025).
6. ஆ) மத்தியப் பிரதேசத்தின் அனுஜ் ஸ்ரீவாத்ரி; 99-வது – கோவையின் வி.எஸ். ரத்னவேல்.
7. இ) COP31 – துருக்கியின் அன்டால்யா; ஆஸ்திரேலியாவுடன் பகிரப்பட்ட தலைமை.
8. அ) தேனி–அல்லிநகரம் நகராட்சி; விருது வழங்கல் – நவ. 11, 2026.
9. அ) உறுப்பு 12 – பகுதி III (அடிப்படை உரிமைகள்) நோக்கில் 'அரசு' என்பதன் வரையறை.
10. இ) 31-03-2031 வரை; ₹4,111 கோடி உத்தரவாத நிதி.

© Shanmugam IAS Academy, Gandhipuram, Coimbatore · https://www.shanmugamiasacademy.in/weekly-current-affairs · இலவச PDF – இணைப்புடன் பகிரலாம்